பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 12 வெள்ளிக்கிழமை 25.04.2025 கதிர் 167



இனிது ரகசியம் அல்ல!

தோல் இருக்கச் சுளை விழுங்கிகளைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பெரும்பாலும் அரச அலுவலகங்களில் இதுபோன்ற யமகாதகர்கள் ஓரிருவராவது இருக்கத்தான் ☞ 2

# அமெ. வரி குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தகவல் எதுமில்லை

## ஜனாதிபதியின் கருத்துக்கு ஹர்ஷ பதில்

அமெரிக்கா சென்ற இலங்கை பிரதிநிதிகள் குழு அங்கு வரி குறைப்பு தொடர்பில் எவ்வித இணக்கப்பாடுகளையும் எட்டியதாக எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அமெரிக்கா சென்ற துணை அமைச்சர் தலைமையிலான குழுவினர் நடத்திய பேச்சுக்கள் சாதகமாக அமைந்தன என்று ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியதற்குப் பதிலளிக்கும் விதத்தில் ஹர்ஷ இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஹர்ஷ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஊழலைத் தடுப்பதற்கு நாம் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். எனவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு 1000 முறை சிந்திக்கவேண்டும் என ஜனாதிபதி கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதேனுமொரு உள்ளூராட்சி மன்றத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறா விட்டால் அந்த பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டாது என ஆளும்தரப்பு விடுக்கும் மறைமுக அச்சுறுத்தலே இதுவாகும்.

2018 உள்ளூராட்சி தேர்தலில் சபைகளில் பெரும்பாலானவற்றை ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன வேகைப்பற்றியது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் எமது நல்லாட்சியே அதிகாரத்திலிருந்தது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதியை நிறுத்தவில்லை. ஆனால் அன்று சில பிரதேசசபைகளில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றன. அவற்றுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை அனைவரும் அறிவர்.

கடந்த இரு தேர்தல்களின் ☞ 2

# மறைந்த பாப்பரசருக்கு ஜானதிபதி அநுர அஞ்சலி



மறைந்த பாப்பரசர் பிரான்சிஸிற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று பிற்பகல் வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்றார். தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதியை, ☞ 2

# காஷ்மீர் தாக்குதல் குறித்து ரணில் அதிர்ச்சி தெரிவிப்பு

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகளின்போது நாம் எப்போதும் இந்தியாவுடன் நிற்போம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞ 2

# தேசபந்துவுக்கு எதிரான மூவர் விசாரணைக் குழு இன்று மீண்டும் கூடுகிறது

பணி இடை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்குவது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதியரவர் ☞ 2

# உள்ளாட்சி தேர்தலில் ஆளும்தரப்பு தோற்கும் என அநுரவுக்கு தெரியும்

## அதனாலேயே மற்ற சபைகளுக்கு நிதி தரமாட்டேன் என மிரட்டுகிறார் – ரணில்

**ஜனாதிபதி அநுரகுமார தனது தேர்தல் பரப்புரைகளில் திசைகாட்டிக்கு வாக்களிக்காவிட்டால், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பணம் கொடுக்க மாட்டேன் என்று கூறுவது ஏனென்றால், இந்தமுறை இடைத்தேர்தலில் ஆளும்தரப்புத் தோற்கும் என்பதை அவர் அறிவார் என்பதாலேயே என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



**திசைகாட்டிக்கு வாக்களித்தால் மட்டும் பிரதேச சபைகளுக்குக் கொடுக்க ஆளும்தரப்பிடம் பணம் இருக்கிறதா** ☞ 2

# பெண்ணைக் கொன்று வீசியவருக்குத் தூக்கு

## கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

ஒரு விடுதியில் ஒரு பெண்ணைக் கொன்று, அவரது உடலை சூட்கேஸில் அடைத்து, கொழும்பு பாஸ்டியன் சாலையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் வீசியதற்காக குற்றவாளிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா படபெண்டி தூக்குத் தண்டனை வழங்கினார்.

குற்றவாளி 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கொலைக் குற்றச்சாட்டுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். இந்தக் குற்றத்தை சந்தேகநபரே செய்தார் என்பதை அரசு தரப்பு சட்டத்தரணி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளார் என்று தீர்ப்பளித்தார் நீதிபதி. ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் நாள் மற்றும் நேரத்தில் குற்றவாளி இறக்கும்வரை வெலிக்கடை சிறையில் கழுத்தில் தொங்கவிடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். ☞ 9

# போதைப் பொருள்களுடன் வெடி பொருளும் சிக்கியது

## கொழும்பில் மூவர் கைது

போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட மூன்றுநபர்கள், 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள் மற்றும் துப்பாக்கிச் சன்னங்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்று சந்தேகநபர்களும் உறவினர்கள் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களுடன், 2.5 கிலோ ஐஸ், 400 கிராம் ஹெறாரைன், ரி -56 தோட்டாக்கள் 10, 9மிமீ பிஸ்டல் தோட்டாக்கள் 15, ரிவால்வர் தோட்டாக்கள் 25, விமான எதிர்ப்பு தோட்டாக்கள் 25 மற்றும் ஒரு பத்திரிகை ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல்காரர் மற்றும் வெளிநாட்டில் மறைந்திருக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியால் நடத்தப்படும் போதைப்பொருள் வளையம் மற்றும் பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் தொடர்புடைய பலர் வீட்டில் பதுங்கியிருக்கின்றனர் என்று கொழும்பு குற்றப்பிரிவுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கொழும்பு குற்றப்பிரிவு முல்லேரியாவில் உள்ள ஒரு வீட்டை சோதனை செய்தனர்.

வீட்டினுள் இருந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர், வீட்டின் ஓர் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் மற்றும் வெடிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

# நாணய நிதிய தொழில்நுட்ப உதவியே பொருளாதார மீட்சிக்கு கைகொடுத்தது

## நிதி அமைச்சர் சிலாகிப்பு

சர்வதேச நாணய நிதியம் மார்ச் 2023 இல் வழங்கிய 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) மூலம் கிடைத்த தொழில்நுட்;ப உதவிகளே, இலங்கை, அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முக்கிய பங்கு வழங்கியது என்று நிதியமைச்சர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் (IMF) வழங்கிய தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கை ஆலோசனைகள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒரு விரிவான சீர்திருத்த திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்த உதவியது என்றும் சிறிவர்தன கூறினார்.

விரிவான சீர்திருத்த திட்டத்தில் பணவியல் கொள்கை, நிதி, நிர்வாகம் மற்றும் நிறுவன சவால்களை நிவர்த்தி செய்ய முடிந்தது என்று அவர் கூறினார்.

செயல்படுத்தப்பட்ட விரிவான சீர்திருத்த திட்டத்தில் கடன் மறுசீரமைப்பு, வருவாய் அடிப்படையிலான நிதி பற்றாக்குறை மற்றும் கடன் குறைப்பு கொள்கைகள் மற்றும் நிறுவன வலுப்படுத்தும் சீர்திருத்தங்கள் ஆகியவை அடங்கும் என்று நிதியமைச்சர் கூறினார்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த கால கூட்டங்களின் கீழ் நடைபெற்ற திறன் மேம்பாட்டு ☞ 2

# குறிஞ்சாக்கேணிப் பாலத்தில் குளித்த சிறுவன் மூழ்கிச் சாவு

கிண்ணியா குறிஞ்சாகேணி பாலத்தில் , நேற்று மாலை குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தான்.

அதே பகுதியைச் சேர்ந்த 10 மாணவனே உயிரிழந்துள்ளார். கடலினுள் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவனின் உடலை அங்கிருந்தவர்கள் தேடுதல் நடத்தி மீட்டனர்.

மூன்று சிறுவர்கள் குளிக்கச்சென்ற வேலையில் இந்தப் பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. மற்றைய இருமாணவர்களும் பத்திரமாகக் கரை திரும்பியுள்ளனர்.

உயிர் இழந்தவரின் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செய்வார்கள். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இத்தகையோர் எல்லாம் அடக்கி வாசிப்பார்கள் என்றொரு எதிர்பார்ப்பு இருந்தது. அது எதிர்பார்ப்பு மட்டும்தான் என்பது வேறுகதை. நான் சொல்ல வந்தது வேறு கதை.

கொழும்பு கெசல்வத்த பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. கொழும்பு நீதிவான் மன்றத்தின் பதிவாளர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். அதன்படி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாகப் பாரப்படுத்தப்பட்ட வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் சீல் வைக்கப்பட்டபடி அப்படியே இருக்கின்றன. ஆனால், உள்ளே இருந்த மதுபானத்தைக் காணோம்.

கொழும்பு கூடுதல் நீதிவான் பசன் அமரசேனவின் உத்தரவின் பேரில் நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் அழிக்கப்படவிருந்த 81 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் 150 'பீர்' போத்தல்களில் இருந்ததெல்லாம் பழைய தண்ணீரும் ஆறிப்போன தேநீரும்தான் என்பது தெரியவந்திருப்பது குறித்துத்தான் பதிவாளர் முறைப்பாடு செய்திருக்கிறார்.

17 மதுபான போத்தல்களை உடைத்து அவற்றிலிருந்த மதுபானத்தை அழிக்க முற்பட்டபோது இது தெரியவந்திருக்கிறது. இதையடுத்து விடயத்தை நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர். உடனடியாக மதுபானங்களை அழிக்கும் பணியை நிறுத்த உத்தரவிட்ட நீதிவான், தொடர்புடைய அனைத்துப்போத்தல்களையும் நீதிமன்ற காவலில் எடுக்கவும் உத்தரவிட்டார்.

நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த போத்தல்களில் இருந்த மதுபானம் மாயமாகி எப்படி அது தண்ணீராகவும் ஆறிப்போன தேநீராகவும் மாறியது என்கிற மாய்மாலத்தைக் கண்டுபிடிக்கும்படி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

பிரச்சினை என்னவென்றால் இந்தத் தில்லுமுல்லு நீதிமன்றத்திற்கு சான்றுப் பொருள்கள் வந்த பின்னர் நிகழ்ந்ததா அல்லது அதற்கு முன்னரே, அதாவது பொலிஸாரால் நீதிமன்றத்தில் சான்றுப் பொருள்கள் ஒப்படைக்கப்படும்போதே தோல் இருக்கச் சுளை விழுங்கப்பட்டுவிட்டதா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியிருப்பதுதான். வேறு இடங்களிலும் நிகழ்ந்திருக்கக்கூ--டிய கடந்த கால அனுபவங்களின்படி இரண்டு இடங்களிலுமே இந்தக் குற்றம் நிகழ்ந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

நீதிமன்றத்திற்கு சான்றுப் பொருள்கள் வருவதற்கு முன்னரே சுளை விழுங்கப்பட்டிருந்தால், அதனை யார் செய்திருப்பார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதிக நேரம் ஆகாது. சோகம் என்னவென்றால் யார் குற்றத்தைச் செய்திருப்பார்களோ அவர்களிடமே சென்று அது பற்றி விசாரிக்கக் கேட்பதுதான். இந்தச் சான்றுப் பொருட்கள் கடந்த 6 மாதங்களில் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டவையா இல்லை அதற்கு முன்பே நடந்ததா என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால முன்னைய ஆட்சியிலேயே இதுபோன்று எல்லாம் நடந்தது என்று கூறிக்கொண்டு ஒரு கூட்டத்தினர் கிளம்பி வருவார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றுரணிலிடம்கேட்கப்பட்டதற்கு, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பணத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது என்று முன்னாள் ஜனாதிபதி பதிலளித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மத்திய மாகாண உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் கண்டி தபால் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. ரணில் அங்கு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பொதுத் தேர்தலில் திசைகாட்டிக்கு வாக்களித்தவர்களும், எங்களுக்கு வாக்களித்தவர்களும் உள்ளனர். அவர்கள் இப்போது திசைகாட்டியால் கொஞ்சம் சோர்வடைந்துவிட்டனர். அவர்களுடன் பேசி உண்மை நிலைமையை விளக்க முயற்சிக்கவும்.

இந்த நாட்டில் வாக்காளர்கள் பாரம்பரிய அரசியல் கட்சிகளை நிராகரித்துவிட்டனர். பொருளாதாரம்சரிந்தபோது, தீர்வு இல்லாததால் மக்கள் திசைகாட்டியை நோக்கிப் பார்த்தார்கள். ஆனால் திசைகாட்டியிடமும் தீர்வு இல்லை. இப்போது சிலர் ஆளும்தரப்பின் மீது வெறுப்படைந்துள்ளனர் - என்றார்.

## தேசபந்துவுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூரசேன தலைமையிலான மூவர் குழு இன்று இரண்டாவது தடவையாக மீண்டும் கூடவுள்ளது.

பொலிஸ்மாஅதிபர்தேசபந்துதென்னகோன் தனது பதவிக்கான அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களை பாரதூரமான வகையில் முறைகேடாகப் பயன்படுத்தியமை செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையிடுவது இந்தக் குழுவின் நோக்கம். சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய உயர்நீதிமன்றநீதியரசர் சூரசேன தலைமையில் புதன்கிழமை இந்தச் சிறப்பு குழு நியமிக்கப்பட்டது.

இந்த சிறப்பு குழுவில் நீதியரசர் (ஓய்வுநிலை) இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோரும் இணை உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தச் சிறப்புக் குழு நியமிக்கப்பட்ட அன்றே முதல் தடவையாக கூடி 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் பிரகாரம் தேசபந்து தென்னகோன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பரிசீலனை செய்து கலந்துரையாடியது. இன்று அது மீண்டும் கூடி விசாரணைகளைத் தொடரவுள்ளது.

## மறைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கானவத்திக்கான்அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உதைக்வே ஆண்டகை வரவேற்றார்.

பின்னர், பேராயருடன் சிறிது நேரம் உரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் பரிசுத்த பாப்பரசருக்கான தனது இரங்கல் குறிப்பினை பதிவு செய்தார்.

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸுக்காக உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பாக இரங்கல் தெரிவித்துக்கொள்வதாக இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## பெண்ணைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொலை வழக்கில் பேட்ரிக் கிருஷ்ணராஜாவுக்கே தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஜூலை 29, 2015 அன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களில் கொழும்பில் உள்ள ஹெய்ட்டி தெருவில் உள்ள ஒரு விடுதியில் தர்மராஜா கார்த்திகா என்ற பெண்ணைக் கொலை செய்து, அவரது உடலை ஒரு சூட்கேஸில் மறைத்து, கொழும்பு பாஸ்டியன் சாலையில் உள்ள ஒரு தனியார் பேருந்து நிறுத்தத்தில் வீசினார் என்று பொலிஸார் அவர் மீது குற்றஞ்சாட்டியிருந்தனர். அவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

## நாணய நிதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் குழு விவாதத்தில் பங்கேற்றபோது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் மூத்த மிஷன் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதித் துறையைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்களான ஒஸ்லாம் அய்டின் மற்றும் சிண்டி நெகஸ் ஆகியோரும் கலந்துரையாடலில் இணைந்திருந்தனர்.

## காஷ்மீர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது :

பஹல்காமில் நடந்த கொடூரமான தாக்குதல், குறிப்பாக சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கொடூரமான குற்றத்தை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில், உங்களுக்கும், அரசுக்கும், இந்திய மக்களுக்கும், குறிப்பாக தமது உறவினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக பிரிவினைவாத பயங்கரவாதத்தின் மோதலை சகித்துக் கொண்ட நாம், மிக நீண்ட காலத்திற்கு முன்பு, வன்முறை ஒருபோதும் தீர்வாகாது என்பதில் உறுதியாக இருந்தோம். ஏனெனில் அது வலியையும் இழப்பையும் மட்டுமே நிலைநிறுத்துகிறது என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். உண்மையில், இந்தக் குற்றச் செயல், தீவிரவாதத்தின் தீங்கான தாக்கத்தை அப்பட்டமாக நினைவூட்டுவதாக உள்ளது.

உங்கள் தலைமையின் கீழ் இந்தியா பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ளாது என்று நம்புகின்றோம். சர்வதேச அரங்கில் உள்ள நாம் அனைவரும் சமாதான கலாசாரத்திற்கு அர்ப்பணிப்புடன் கூடிய எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபடுவதற்கு இது சரியான நேரம் ஆகும் - என்றுள்ளார்.

## குறிஞ்சாக்கேணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாசா கிண்ணியாதள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதே பாலத்தில் படகு பாதை கவிழ்ந்து எட்டு பேர் உயிரிழந்த சம்பவமும் ஏற்கனவே பதிவாகியிருக்கிறது.

மாணவனின் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அமெ. வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது மக்கள் போதுமானளவு ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். எனவே இனியும் மேலும் மேலும் அவர்களை ஏமாற்ற முற்பட வேண்டாம்.

அமெரிக்கா சென்ற இலங்கை பிரதிநிதிகள் குழு எந்தவித இணக்கப்பாட்டையும் எட்டியதாக எமக்குத் தகவல் கிடைக்கவில்லை. இது தொடர்பில் வெளியிடப்படவுள்ளதாகக் கூறப்படும் கூட்டு அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றோம். அந்த அறிக்கையின் ஊடாக வரி 44 சதவீதத்திலிருந்து எவ்வாறு குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளமுடியும். அவ்வாறில்லை எனில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும்.

இது குறித்து ஜனாதிபதிக்கு நான் வழங்கிய ஆலோசனையில் நாட்டைச் சூழவுள்ள மதில்களை தகர்த்து பொருளாதார பாலங்களை அமைக்குமாறு குறிப்பிட்டிருந்தேன். ட்ரம்ப்பின் வரி அதிகரிப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு நாம் எவ்வாறு ஏற்றுமதி வருமானத்தை தக்க வைத்துக் கொள்வது என்பதை சிந்திக்கவேண்டும். அவ்வாறில்லை எனில் இந்த ஆளும்தரப்பு அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 சதவீதமாகக் குறைத்துவிடும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# தையிட்டியில் அரசியல் செய்யும் குழுக்களை அகற்றவேண்டுமென்பது கொலை மிரட்டல்

## அருட்தந்தை சத்திவேல் காட்டம்

அரச பயங்கரவாதத்தால் எத்தனையோ பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கான நீதி கிட்ட எந்தவிதமான அறிகுறியும் தென்படாத நிலையில்தையிட்டியில்அரசியல்செய்யும்குழுக்களை அகற்ற வேண்டும் எனக் கூறுவது பகிரங்க கொலை அச்சுறுத்தலாகவே கொள்ளல் வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

'நாட்டில் இனி இனவாதமும் மதவாதமும் இல்லை' எனக் கூறும் தற்போதைய ஜனாதிபதி தையிட்டியில் பேரினவாத மேலாதிக்க மனப்பான்மையுடனும் ஆக்கிரமிப்பு சிந்தனையுடனும் சட்டத்துக்கு விரோதமாக மக்கள் காணிகளில் கட்டப்பட்டுள்ள கட்டட பிரச்சினையை பேரினவாத பிக்குகளின் கைகளில் ஒப்படைத்து பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் காலடியில் விழவைப்பதற்கு நினைப்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடந்த இரண்டு வருட காலமாக போராடும் அரசியல் சக்திகளை அகற்றிட திட்டமிடுவதும் இனவாதமே, மதவாதமே.

தையிட்டியில் எழுந்துள்ள மக்களின் பிரச்சினை பேரினவாத அரசியலில் ஆணிவேரினால் தோற்றுவிக்கப்பட்டதே. அதனை மூடி மறைத்து அரசியல் பேசும் தற்போதைய ஜனாதிபதி, பண்டாரநாயக்க, ஜெயவர்தன, சந்திரிகா, ராஜபக்ஷ வழியில் வந்த தமிழர்களுக்கு எதிரான அரசியல்வாதி என்பதில் மாற்றுக் கருத்தில்லை எனலாம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் அண்மித்து கொண்டிருக்கையில் கண்டி தலதா மாளிகையில் வைக்கப்படுள்ள புனித தந்தத்தினை பௌத்த மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தி அரசியல் செய்யும் ஜனாதிபதி வடக்கில் தையிட்டியில் அரசியல் நீதிக்காக போராடுபவர்களை குறுகிய அரசியல் நோக்கமும் கொண்ட அரசியல்வாதிகள் என அடையாளப்படுத்தி குறிப்பாக தெற்கின் மக்களுக்கு அவர்களை இனவாதிகள், மதவாதிகள் என காட்ட நினைப்பது அரசியல் வஞ்சக நோக்கத்துடனாகும்.

தமிழர்களின் குரலாக கொழும்பு தலைநகரில் ஓங்கி குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம் அவர்கள் பட்டப்பகலில் கொழும்பு நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கான நீதி இன்னும் கிட்டவில்லை. அதே அரச பயங்கரவாதத்தால் எத்தனையோபேர்படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். அதற்கான நீதி கிட்டும் என்பதற்கான எந்த விதமான அறிகுறியும் தென்படாத நிலையில் தையிட்டியில் அரசியல் செய்யும் குழுக்களை அகற்ற வேண்டும் எனக் கூறுவது பகிரங்க கொலை அச்சுறுத்தலாகவே கொள்ளல் வேண்டும்.

தையிட்டி சட்ட விரோத கட்டடத்துக்கு எதிராகவும் நில மீட்புக்காகவும் கடந்த இரண்டு வருட காலமாக போராடுபவர்களை கடந்த காலங்களில் பொலிஸார் அச்சுறுத்தி அடாவடித்தனம் புரிந்ததோடு, விசாரணை என பொலிஸ் நிலையங்களுக்கும் அழைத்ததுடன் நின்றுவிடாது நீதிமன்றத்திலும் நிறுத்தி போராட்டத்தை தொடருவதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்தினர். எனினும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அதற்கு எதிரான உச்சக்கட்ட தொனியாகவே ஜனாதிபதியின் கூற்று அமைந்துள்ளது.

இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்திய இனப்படுகொலையோடு தமிழர் தாயக அரசியல் அழிந்து ஒழிந்துவிட்டது என நினைக்கும் பேரினவாதிகளுக்கு வடக்கு மற்றும் கிழக்கில் பேரினவாதத்துக்கு எதிராக நடக்கும் அரசியல் போராட்டங்களும் நீண்ட நாள்களாக தொடரும் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டத்தை முழுமையாக அடக்கி ஒடுக்குவதற்கு தையிட்டி போராட்டத்தில் தெரியும் அரசியல் தலைமைத்துவத்தையும், அது நாடாளுமன்றத்தில் எழுப்பும் குரலையும் பயங்கரவாத குரலாக சித்திரிக்க எடுக்கும் முயற்சிக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நன்கு பாடம் புகட்ட வேண்டும்.

தமிழர்களின் அரசியலை அழிக்க பல்வேறு வடிவங்களில் இன அழிப்பை தொடர்ந்து இறுதியில் இனப்படுகொலை புரிந்தவர்கள் தொடர்ந்தும் தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்க படை தளங்களை விரிவாக்கி பலப்படுத்தியவர்கள் இறுதியில் தமது ஆக்கிரமிப்பு நோக்கத்தினை நிறைவேற்ற படையினரின் பாதுகாப்போடு பௌத்த சிங்கள அடையாளங்களை விதைக்கத் தொடங்கிவிட்டனர்.

இது விடயங்களில் கடந்த காலங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அங்கீகாரம் அளித்து ஆதரித்த மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது தேசிய மக்கள் சக்தி முகத்தோடு வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியலை அழித்திடும் அரசியலை வேகப்படுத்திட முகாம் அமைத்து அரசியல் யுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தமது அரசியலுக்கு எதிரானவர்கள் என நினைப்பவர்களை அடக்குவதற்கு இனவாத சாயம் பூச முற்படுவதோடு இவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தையும் பாவிக்க தயங்க மாட்டார்கள். இதன் மூலம் தமிழர்களை அரசியல் நீக்கம் செய்வதே இவர்களது நோக்கம் எனலாம்.

நீண்ட கால இன அழிப்புக்கும், இறுதி இனப்படுகொலைக்கும், நில ஆக்கிரமிப்புக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கும், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்வதற்கும், பேரினவாத மதவாதிகள் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கும் காரணமாக இருந்தவர்கள் தற்போது மேடை அமைத்து நீலிக்கண்ணீர் வடித்து எங்களுக்கு வாக்களித்தால் உங்களின் கண்ணீரை துடைப்போம் என்று கூறுவது மீண்டும் மீண்டும் தமிழர்களை அழிவுக்குள் தள்ளுவதற்கே.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதலை கண்ணீர் வடிப்பவர்களையும், தனது கட்சிக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் அரசியல் துரோகம் செய்பவர்களையும், அற்ப சலுகைகளுக்காக மறைமுகமாக தமிழர்களின் தேசியத்துக்கு எதிராகவும் செயற்படும் அரசியல் துரோகிகளையும்அடையாளம்கண்டுதுடைத்தெறிந்து தமிழர் நிலம் காக்கவும் தேசியம் காக்கவும் துணிச்சலோடு குரல் எழுப்புவோர்க்கு எமது வாக்கு பலத்தை வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். தேசத்தின் ஒற்றுமையே தேசியத்தின் வலிமை என்பதை நினைவில் கொள்வோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நில அளவைத் திணைக்கள கட்டடம் வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)



சம்மாந்துறையில் நில அளவை திணைக்களத்திற்கு நிரந்தரமான கட்டடம் இன்மையால் இதுவரை காலமும் பிரதேச சபை கட்டடத்தில்தற்காலிகமாக இயங்கி வந்தது.

குறித்த கட்டடத்தில் போதிய அளவு வசதிவாய்ப்புகள் இல்லாமையால் நில அளவைத் திணைக்களத்தால் சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு விடுத்த கோரிக்கைக்கமைய பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா அவர்களின் முயற்சியால் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸிற்கு சொந்தமான கட்டடம் புதன்கிழமை நில அளவைத் திணைக்களத்திற்கு பிரதேச செயலாளர் முன்னிலையில் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின் ஆலோசனையின் பெயரிலும் பிரதேச செயலாளரின் முயற்சியாலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் நில அளவைத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகர் ஜி.ஆர்.எல். பெரேரா,

சம்மாந்துறை பிரதேச நில அளவை அத்தியட்சகர் ஏ.எஸ்.எம் நஜாகத், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் கெப்டன் எம்.டி நௌஸாத், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



நில அளவைத் திணைக்களத்திற்கான இவ் கட்டடம் வழங்கப்பட்டதால் சம்மாந்துறை, இறக்காமம் ,சென்றல்கேம்ப் போன்ற பிரதேசங்களின் உள்ள பொது மக்கள் நன்மையடைவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தேவைகள் தொடர்பில் நேற்று ஆராய்வு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தொடர்பாக வியாழக்கிழமை வைத்திய சாலைக்கு பகல் திடீர் விஜயம் செய்த வடக்கு மாகாண ஆளுநரும் பிரதம செயலாளரும் வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: -

வியாழன் பகல் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த ஆளுநரும் பிரதம செயலாளரும்கொண்ட குழுவினர்,மாலைஅவசரஅவசரமாக யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்திய சாலைகளின் 5 வைத்திய அத்தியட்சகர்களுடனும் விசேட கூட்டத்தை அவசரமாக ஒழுங்கமைத்திருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதம செயலாளர் இளங்கோவன் -

வைத்தியசாலையின் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காகவும் - வைத்தியசாலைகளின் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் நோயாளர்களுக்கு வினைத்திறனான சேவையை நலன்புரிச் சங்கங்கள் மேற்கொள்வதற்குமாகவே நலன்புரிச் சங்கங்கள், வாகன தரிப்பிட வாடகை என்பவற்றை வைத்திய சாலைக்கே வழங்கியிருந்தோம் என்று தெரிவித்தார். ஆனால், இன்று காலை ஓர் ஆதாரவைத்தியசாலைக்கு சென்றிருந்தோம். எதற்கெடுத்தாலும் பணம் இல்லை, பணம் இல்லை என்று வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். வைத்தியசாலை நலன்புரிச் சங்கங்கள் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கே. - என்று தெரிவித்தார்.

அத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுதொடர்பிலும் கடும் காட்டத்துடன் தெரிவித்த பிரதம செயலர், சில இடைத்தரகர்களின் செயற்பாடு தொடர்பில் தெரிவித்தார். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் மௌனமாகத் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எளிமையின் பேரொளி

2025 ஏப்ரல் 21, உயிர்த்த ஞாயிறுக்கு மறுநாள் திங்கட்கிழமை அன்று, பாப்பரசர் பிரான்சிஸ் தனது 88ஆவது வயதில் வத்திக்கானில் உள்ள தனது இல்லமான காசா சான்டா மார்த்தாவில் காலமானார். அவரது மறைவு, உலகின் 1.3 பில்லியன் கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்லாது, அனைத்து மதங்களைச்சேர்ந்த மனிதர்களுக்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

பிரான்சிஸ், 2013ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று, முதல் லத்தீன் அமெரிக்க பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பாப்பரசர் காலம், எளிமை, கருணை மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் பிரதிபலிப்பாக இருந்தது. அவர், வறியோர், அகதிகள், சிறை கைதிகள் மற்றும் சமூகத்தின் புறக்கணிக்கப்பட்டவர்களின் உரிமைகளை முன்னிறுத்தினார். அவரது இறுதி நாட்களில்கூட, அவர் சிறை கைதிகளைச் சந்தித்து, அவர்களுக்கு ஆதரவு வழங்கினார்.

பிரான்சிஸ், தனது உடல்நலக் குறைபாடுகளையும் மீறி, தனது கடமைகளைத் தொடர்ந்தார். அவர், இரட்டை நிமோனியாவிற்காக 38 நாட்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரும், ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். அவரது இறப்பு, ஒரு திடீர் இழுப்புக் (ஸ்ட்ரோக்) காரணமாக ஏற்பட்டது .

பிரான்சிஸ், தனது இறுதி விருப்பமாக, வத்திக்கானில் உள்ள புனித மரியா மேஜர் பசிலிக்காவில் எளிமையாக அடக்கம் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்திருந்தார் . அவரது உடல், சனிக்கிழமை நடைபெறும் இறுதிச் சடங்கிற்கு முன், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிரான்சிஸ், ஒரு எளிமையான மனிதராக இருந்தாலும், அவரது செயல்கள் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது மறைவு, உலகின் அனைத்து மக்களுக்கும் ஒரு நினைவூட்டலாகும்: எளிமை, கருணை மற்றும் சமூக நீதி என்பது எப்போதும் முக்கியமானவை.

பிரான்சிஸ், ஒரு பாப்பரசராக மட்டுமல்லாது, ஒரு மனிதராகவும், உலகின் ஒளியாகவும் இருந்தார். அவரது நினைவுகள், எப்போதும் நம்மை வழிநடத்தும்.

# ஏமாறத் தயாரில்லை

**என். சத்தியமூர்த்தி**

எது எப்படியோ, எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல்கள், வட மாகாணத்தை பொறுத்தவரையிலாவது ஒரு 'மிரட்டல்' தேர்தலாக உருவெடுத்து வருகிறது. காரணம், தங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று ஆளும் தரப்பு மேடைப் பேச்சுகளின் மூலம் மிரட்டுகிறது என்று குற்றஞ்சாட்டும் தமிழ் அணிகள், 'தமிழ் தேசியம்' என்று கூறிக்கொண்டு, அதே வாக்காளர்களை மிரட்டுகிறது.



நாடாளுமன்றத் தேர்தலை போலவே தற்போதும் தமிழர்கள் வாக்களித்தால், 'தமிழ் தேசியம்' செத்துவிடும் என்ற அளவிற்கு அவர்களுடைய பரப்புரைகள் உள்ளன. அதேசமயம், தாங்களில் யார் அதிக, அதீத 'தமிழ் தேசிய' உரிமையாளர் என்று அவர்கள் கூறுவதில்லை. அதாவது, மிரட்டல் அரசியலில் இருந்து அவர்கள் உருட்டல் அரசியலில் மீண்டும் இறங்கி உள்ளார்கள்.

அதிக வாக்குகள் பெற்ற காரணத்தால், ஆளும் தரப்பினரே வட மாகாண நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார்கள் என்ற கணிப்பு உள்ளது. இது குறித்து வாயாடும் தமிழ் தரப்பினர், தற்போதைய சூழலில் அதே ஆளும் தரப்பினர் அதிக வாக்குகளையோ, ஆசனங்களையோ உள்ளாட்சி சபைகளையோ பெற்றுவிட்டால், தமது மக்களின் 'தவறை' ஒத்துக்கொள்ளப் போகிறார்களா? அவர்களை சபிக்கப் போகிறார்களா? அல்லது தங்களை சுய பரிசோதனை செய்து கொள்ளப் போகிறார்களா?

### சுமந்திரன் 'பார்முலா'

முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, தங்களை தாங்களே புறம் பேசும் வழக்கத்தை தமிழ் அரசியல் கட்சிகள் இந்த முறை முன்னெடுக்காதது வரவேற்கதக்கது. அது, தமிழர் ஒற்றுமை குறித்த அவர்களது மாறுபட்ட நோக்கை குறிக்கிறதா என்றால் இல்லை. மாறாக, ஆளும் தரப்பிற்கு எங்கே தமிழ் மக்கள் வாக்களித்து விடுவார்களோ என்ற கவலையின் வெளிப்பாடே அவர்களுடைய பரப்புரை உத்தியின் பின்னால் உள்ள எண்ணவோட்டம்.

அதில்கூட, தேர்தல் நாள் நெருங்க, அரசு கட்சியை வம்பிக்கிழுப்பது போல் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்றோர் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக மீண்டும் பேசத் தொடங்கி உள்ளனர். ஆளும் தரப்பினரின் ஒற்றையாட்சி முறைமைக்குத் தமிழ் அரசுக் கட்சி ஆதரவு தெரிவிப்பதாக அவர் கூறி உள்ளார்.

எது எப்படியோ, தமிழ் தலைமைகளைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி தேர்தல் முறை காரணமாக, அனைத்து தரப்பினருக்கும் ஏதோ ஒரு வகையில் ஆசனங்கள் கிடைக்கப்பெறும். ஆனால், யாருக்குமே பெரும்பான்மை இல்லை என்ற 'தொங்கு நிலை' தோன்றுமேயானால், அப்போது, தமிழ் தரப்புகள் ஒன்றாக, உள்ளாட்சி சபைகளை கைப்பற்றலாம். அந்த வகையில், ஆளும் தரப்பினர் தமிழர் பகுதிகளில் அடிமட்ட ஆட்சி பொறுப்பிலும் ஊடுருவதை தடுக்கலாம்.

தற்போதைய ஆளும் தரப்பையும் வட மாகாண அரசியல் சூழலையும் விட்டுத் தள்ளுங்கள். இந்த பார்முலாவை தானே சுமந்திரன், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி, பின்னர் நிறுத்தப்பட்ட உள்ளாட்சி தேர்தல் காலத்திலும் முன் வைத்தார். அன்று அவரது கருத்தை எதிர்த்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உடைத்த செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்ற தலைவர்கள் எதிர்வரும் சூழலில் என்ன சொலலப்போகிறார்களோ?

இன்னும் சொல்லப்போனால், அதுவொன்றும் சுமந்திரன் 'பார்முலா' அல்ல. கடந்த உள்ளாட்சி தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து அறிந்த காரணத்தினால், அவரால் நிலைமையை கச்சிதமாக கணக்கிட முடிந்தது. அந்த விதத்தில், கடந்த தேர்தலுக்கு பின்னர் அப்போது ஒன்றாக, ஒற்றுமையாக இருந்த கூட்டமைப்பே யாழ்பாணம் உள்ளிட்ட பல உள்ளாட்சி சபைகளிலும் பெரும்பான்மை கிடைக்காமல், அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி-யுடன்கூட தேர்தலுக்கு பின்னரான கூட்டு வைக்கப் பின் கதவால் முனைந்தது.

இந்த உண்மையை முன் வைத்து தான் சுமந்திரன் 'பார்முலா' உருவாக்கம் பெற்றது. அன்றே, ஒற்றுமையாக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைமை அடுத்தவரை நாட வேண்டிய கட்டாயத்தில் இருந்தால், இப்போதைய நிலைமையை என்னவென்று சொல்ல!.

### 'தேசிய' அரசியல்

இதில் நகைப்பிற்குரிய செயல்பாடுகள் மற்றும் சொல்லாடல்கள் பல உள்ளன. குறிப்பாக, தமிழ் அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் குறித்து பரப்புரை செய்யும் ஆளும் தரப்பினர், தமிழ் அரசியல் தலைமைகள், இனப்பிரச்சினை குறித்து அரசியல் செய்யாது இருப்பதே அரசியல் தீர்விற்கான முதல் கட்டம் என்று கருத்து தெரிவித்து வருகிறார்கள். அதில் சிறிது உண்மையும் உள்ளது. ஆனால்,

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஏமாறத்..........

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இதே ஆளும் தரப்பினர், 'தேசியம்' என்ற பெயரில் கடந்த ஆறு தசாப்தங்களாக முன்னெடுத்த அரசியல் செயல்பாடுகள் எதில் சேர்த்தி?

அந்தக் காலகட்டத்தில், தத்தமது வழியில், தெற்கே ஜேவிபி-யும் வடக்கே விடுதலைப் புலிகள் அமைப்பும் எதிர்மைறயான 'தேசியம்' என்று கருவின் பெயரில் கட்டவிழ்த்துவிட்ட வன்முறையும் அராஜகமும் ஒன்றிற்கு ஒன்று போட்டியாகவே இருந்தன.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் உள்ளது. எந்தவொரு காலகட்டத்திலும், இந்த இரு அமைப்புகளுமே அடுத்தவரை தாக்கிப் பேசியதுகூட இல்லை. அவர்கள் குறி வைத்தது எல்லாம். அரசமைப்பு மற்றும் அரச தலைமைகள் மற்றும் தங்களுக்கு இடையூறாக இருப்பார்கள் என்று கருதிய தங்கள் இனத்தைச் சார்ந்த அரசியல் தலைமைகள் மற்றும் தலைவர்கள்.

## சிறீதரனின் சவால்

தேசியத்தின் பெயரில் இரு தரப்பினரும் அடித்த கூத்து, இலங்கை என்ற ஒரு தேசத்தின் ஆணி வேரைக்கூட அசைத்துப் பார்த்தது. தற்போது, ஜனாதிபதி அனுரவின் தேர்தல் பரப்புரைக்குப் பதிலளிப்பதாக நினைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விடுத்துள்ள சவால் பின்னர் அவருக்கே வினையாக மாறலாம்.

தென்னிலங்கை தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் தங்களை தேர்வு செய்யாத உள்ளாட்சிகளுக்கு அரசின் நிதியுதவி மட்டுப்படுத்தப்படும் என்ற வகையில் ஜனாதிபதி அனுர தொடர்ந்து பேசி வந்தார். இங்கே மன்னாரில் பரப்புரை செய்யும்போதும் அதை கோடிட்டு காட்டினார். ஆனால், அது தென்னிலங்கையில் பிரச்சினையாகி, தேர்தல் ஆணையம் வரை சென்ற பிறகு, அனுர அதற்கு சப்பைகட்டு கட்டும் விதமாக இல்லாத காரண-காரியங்களை கண்டுபிடித்து விளக்கம் அளித்துள்ளார்.

அதாவது, தங்கள் தரப்பை தவிர்த்து அனைத்து அரசியல் கட்சிகளும் லஞ்ச-லாவண்யம் மிகுந்தவை. அவர்களை தேர்ந்தெடுத்தால், உள்ளாட்சிகளையும் கொள்ளை அடிப்பார்கள். இத்தகைய சூழ்நிலையில், அந்த உள்ளாட்சி சபைகளுக்கான நிதியுதவியை மட்டுமே அரசு கவனமாக கையாளும் என்று மட்டுமே தான் கூறினார் என்று ஒரு வாரத்திற்கு பின்னர் விளக்கம் அளித்துள்ளார். முழுவதும் நனைந்த பின் முக்காடு போட்டுள்ளார். அதேசமயம் தனது பழைய 'எச்சரிக்கை' பரப்புரைக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பிரதமர் ஹரிணி அமரசூர்யா மட்டுமே, அநுரவின் புதிய விளக்கவுரையை தனது பரப்புரைகளில் கூறி வருகிறார்.

அநுரவின் மன்னார் பரப்புரைக்கு முன்பே, செல்வம் அடைக்கலநாதன், ஆளும் தரப்பிற்கு வாக்களித்தால், மன்னார் காணாமல் போய்விடும் அல்லது கைவிட்டு போய்விடும் என்ற வகையில் பேசினார். அநுரவின் எச்சரிக்கையை மிரட்டல் என்று கூறும் தமிழ் தலைவர்கள் செல்வம் பேசிய பேச்சை எவ்வாறு வகைப்படுத்துப் போகிறார்கள்? ஆனால், அநுரவின் 'எச்சரிக்கை' அல்லது மிரட்டலுக்கு சிறீதரனின் எதிர்வாதம் கொஞ்சம் ஓவராகத்தான் போய்விட்டது.

அரசு, உள்ளாட்சிகளுக்கான நிதிகளை ஒதுக்காமல் இருந்தால், தமிழர்கள் தனியாக போய்விடுவார்கள் என்று அவர் கூறியது கொசுவை யானையாக உருவகப்படுத்தும் அவரது முயற்சியையே கோடிட்டு காட்டியது.

தேர்தல் காலத்தில், ஏடாகூடமாக ஏதாவது செய்யபோய், அதன் பலன் சிறீதரன் உள்ளிட்ட தமிழ் தரப்பினருக்கு சென்று விடக்கூடாது என்பதில் அரசு கருதலுடன் செயல்படும். ஆனால், தேர்தல் முடிந்து வேறு ஒரு பிரச்சினையின் அடிப்படையில், அரசு சிறீதரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவருடைய தற்போதைய பரப்புரை பயன்படலாம்.

## ஏமாறத் தயாரில்லை

தன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால், கட்சிக்குள்ளும் தமிழ் பொது பரப்பிலும் தங்களது செல்வாக்கு உயரும் என்று யாராவது கருதினால்,



அது வெறும் பகல் கனவு. இவ்வாறெல்லாம் பேசும் போதும் அதன் பயனை முன்னரே எடை போடும் போதும், இந்த தலைவர்கள் தங்கள் பின்னால் எத்தனை பேர் நிற்கிறார்கள் என்று ஒரு முறையாவது திரும்பி பார்க்க வேண்டும்.

நாடாளுமன்றக் காலத்தில் ஆகட்டும், தற்போது உள்ளாட்சி தேர்தல் காலத்தில் ஆகட்டும், தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் தலைமைகளில் ஒருவர்கூட பொது வெளியில் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தினார்கள் என்று இல்லை. காரணம், தங்களுடைய பரப்புரைகளுக்குக் கூட்டம் வராது என்பதை அவர்கள் முன்னரே உணர்ந்திருந்ததுதான்.

மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டுமானால், இரண்டாண்டுகளுக்கு முன்னர் நீதிபதி சரவணராஜா விவகாரத்தில், அனைத்துத் தமிழ் தரப்பினரும் இணைந்த பின்னரும், மனிதச் சங்கிலியில் நூறு பேர் கூடத் தேறவில்லை. அவர்கள் அழைப்பு விடுத்த கடையடைப்பு, ஹர்த்தால் பிசுபிசுத்தது.

இன்றைய கள நிலை முன்பைவிட மோசம். அதனைத் தமிழர் தரப்பு புரிந்துகொண்டு அரசியல் செய்யவேண்டும். ஆனால், ஒற்றுமை இன்றி, அடுத்தவரைப் பழித்து அரசியல் செய்த காலம் விடுதலை புலிகள் அமைப்போடு போய்விட்டது.

தற்போதைய தலைமுறையினர், தங்களது சமூக-அரசியல் தலைமைகளை நம்பிக் கெட்டதுபோதும் என்ற மனநிலையில் உள்ளனர். அவர்கள் அமைதியை வேண்டுகின்றனர். தமிழ் தேசியத்தைவிட தனி மனிதனின் பொருளாதார வளர்ச்சியே, அவர்களது எதிர்பார்ப்பு. இளைய தலைமுறை தமிழர்கள் ஏமாற தயாரில்லை.



# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை ஆராய்ந்து விசாரிக்கும் குழுவில் ஷானி அபேசேகரவும்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுக்கும் குழுவில் ஐந்தாவது நபராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் பதில் பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவால் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு, விசாரணை அறிக்கையை ஆய்வு செய்ய ஐந்து உறுப்பினர்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

# நாளை வவுனியாவுக்கு வருகிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கா நாளை வவுனியாவிற்கு வருகை தரவுள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் வெற்றி நமதே ஊர் எமதே என்னும் தொனிப் பொருளில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள மாநகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா நகரசபை மைதானத்தில் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் கூட்டத்திற்கே ஜனாதிபதி வருகை தரவுள்ளார். 100

# வரிப்பத்தான்சேனை அஸ்ரப் மைதானத்திற்கு புதிய பிரம்மாண்ட நுழைவாயில் அமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

வரிப்பத்தான்சேனை மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்த அஷ்ரப் ஞபகார்த்த பொது விளையாட்டு மைதானத்திற்கு புதிய நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸால் ரி- 100 திட்டத்தின் கீழும், பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளால் செய்யப்பட்ட 54 லட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு நிறைவடைந்துள்ள பிரம்மாண்ட நுழைவாயிலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் பார்வையிட்டார்.





நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நுழைவாயிலைமக்களுக்குகையளித்தல்,இந்த மைதான மேலதிக அபிவிருத்திகள், இன்னும் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும், ஏனைய தேவைகள் சம்பந்தமாகவும்இதன்போதுகலந்துரையாடி இருந்தார்.

மேலும் இவ் விஜயத்தின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஜே.எம். அன்வர் நௌஸாத், மக்கள் தொடர்பாடல், ஊடக விவகார செயலாளர் நூருல் ஹுதா உமர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் விளையாட்டு வீரர்களும், பாடசாலை மாணவர்களும் நிறைவான பலனை அடைவதுடன் எதிர்காலத்தில் விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சிகளை பெற இது வசதியாக இருக்கும் என்றும் இந்த நிர்மாணபணியானது அப்பிரதேசமக்களுக்கு மட்டுமல்ல ஏனைய பிரதேச வீரர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உளசுகாதார குழு கூட்டம்

(சர்ஜுன் லாபீர்)



சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம் நேற்று (வியாழக்கிழமை) பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு, பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல், உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்மந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உள நல வைத்திய நிபுணர் டாக்டர் கசூன் கடுவல, சம்மாந்துறை குவாசி நீதிபதி ஏ.எல் ஆதம்பாவா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே குறைசா, உளவளதுணை உத்தியோகத்தர் கே.தயாளினி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொது சுகாதார அதிகாரி, வலயக் கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர், பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்கள் மற்றும் வறுமைக்குட்பட்ட சிறுவர்களின் கல்வி சார் ஏனைய துறைசார் முன்னேற்றத்திற்கும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு சிறார்களின் பொழுது போக்கு அம்சங்களை மேம்படுத்துவதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் சிறுவர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிணக்குகள், பிளவுகளை உடனடியாக பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தீர்த்து வைக்க வேண்டும் என்பதோடு சமூகத்தின் மாறுபாடுகளை சரியாக அவனித்து பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் என குறிப்பிட்டு இருந்தார்.

அத்துடன் நேற்றைய தினம் சம்மாந்துறை உடங்கா-02 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மூன்று வயது சிறுவனின் அகல மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தினையும்,கவலையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதேச செயலாளர் குறிப்பிட்டு இருந்தார்.

எனவே சிறுவர்களுக்கான உரிமைகளை முறையாக பேணி சிறுவர்களின் கல்வி மேம்பாட்டு, உள மேம்பாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் பிரதேச செயலாளர் குறிப்பிட்டு இருந்தார்.





# அமைதியான முறையில் நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பு மட்டுநகரில்

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூல வாக்களிக்கும் பணிகள் அமைதியான முறையில் திணைக்களங்களில் நடைபெற்றன.



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் நேற்று (வியாழக்கிழமை) காலை தொடக்கம் வாக்களிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பின்புதியமாவட்டசெயலகம் உட்பட அனைத்து பிரதேச செயலகங்கள் திணைக்களங்களில் வியாழக்கிழமை காலை முதல் அரச ஊழியர்கள் வாக்களிக்கும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 11554 அரச ஊழியர்கள் அஞ்சல் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜஸ்ரீனா முரளிதரன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமையும் அரச ஊழியர்கள்வாக்களிக்கமுடியும்எனவும் அதில் தவறுவோர் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்றுத் தபால் மூல வாக்களிப்பு

(ஹஸ்பர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று (வியாழக்கிழமை)இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த தபால் மூல வாக்களிப்பில் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

அமைதியான முறையில் இடம்பெற்றதபால்மூலவாக்களிப்பினை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ,உதவி தெரிவத்தாட்சி அலுவர் உள்ளிட்டோரும் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.



# தபால் மூல வாக்களிப்பு அமைதியாக இடம்பெற்றது

## கிண்ணியாவிலும்

(ஹலால்தீன்)

தபால் மூல வாக்களிப்பு கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணிய வலய கல்வி அலுவலகம் முதலானவற்றில் நேற்று காலை 8:30 மணி முதல் நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் 176 வாக்காளர்கள் இம்முறை தபால் மூல வாக்களிப்பு செய்வதற்கு விண்ணப்பித்தனர்.

கிண்ணியா பிரதேச செயலகத்தின் மாநாட்டுமண்டபத்தில்அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் அமைதியாகவும், சுறுசுறுப்பாகவும் வாக்களிப்புகள் இடம்பெற்றன.

தபால் மூலமான தமது வாக்குகளை பதிவு செய்வதற்காக அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

கிராம சேவை அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் முதலானோர் வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தனர்.





# 5 ஆயிரம் வெசாக் கூடுகளை தயாரிக்க நுவரெலியா திட்டம்

(கேதீஸ்)





இந்த ஆண்டு நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் பண்டிகையின் போது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலை மாணவர்களால் 5,000 வெசாக் கூடுகள் தயாரிக்கப்பட்டு அவற்றை வீதிகளில் காட்சிபடுத்தி ஒளிரச் செய்யதிட்டமிடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்ன கோன் தெரிவித்தார்.

தேசிய வெசாக் விழாவை நடத்துவது தொடர்பாக அரசு அதிகாரிகள் மற்றும் பிறருக்குத் தெரிவிக்கும் வகையில் கடந்த புதன்கிழமை நுவரெலியாவிலுள்ள சர்வதேச பௌத்த மையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள 154 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெசாக் கூடுகளை தயாரித்து விநியோகிக்கும் திட்டத்தில் பங்கேற்று வருகின்றனர் எனவும், இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா மே 10 முதல் 16 வரை ஒரு வாரத்திற்கு நுவரெலியாவில் 'பஜேத மித்தே கல்யாணே' (நண்பர்களின் துணையுடன் நண்பர்கள்) என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடத்ததிட்டமிடப்பட்டுள்ளதாகவும் துசாரி தென்னக்கோன் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் மேலும் தெரிவிக்கையில் -

பிரதான விழா மே 10 ஆம் திகதி நுவரெலியா சர்வதேச பௌத்த மையம் மற்றும் நுவரெலியா நகர மண்டபத்தை (சினிசிட்டா) மையமாகக் கொண்டு நடைபெறும் என்றும், இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா முழு நுவரெலியா மாவட்டத்தையும் உள்ளடக்கி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. - என்றார்.

சர்வதேச பௌத்த மையத்தின் பிரதம விகாராதிபதி வணக்கத்திற்குரிய கிரியோருவே திரானந்த தேரர், நுவரெலியா மாநகர ஆணையாளர் ஈ.எம். பண்டார, மேலதிக மாவட்ட செயலாளர் (காணிகள்) ஷாலிகா லிண்டகும்புர, மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) தினிகா கவிசேகர, நுவரெலியா பிரதேச செயலாளர் பிரகீத் தனன்சூரிய மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# உள்ளாட்சி தேர்தல் 2025

## மு.கா. தேர்தல் அலுவலகம் கண்டக்குழியில் திறப்பு

(சியாஜ்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபையின் கண்டக்குழி வட்டாரத்திற்கான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசார காரியாலயம் பள்ளிவாசல்துறையில் வேட்பாளர் முயிஸ்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலைங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எச்.எம்.நியாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உருப்பினர் ஏ.எச்.எம்.பைரூஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான எம் எச் எம் ஹில்மி மற்றும் கற்பிட்டி பிரதேசசபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களான மௌலவிறிப்கான்(றஹ்மானி), முயீஸ்தீன் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான கட்சியின் போராளிகளும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் வீட்டுக்கு வீடு பரப்புரைகள் தொடக்கம்

(ஸாகிர்)





எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியில் காரைதீவுபிரதேசசபையின் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடும் வெற்றி வேட்பாளருக்காக வீட்டுக்கு வீடு பிரசாரம் செய்யும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாளிகைக்காடு கிழக்கு வட்டார வேட்பாளர் பர்ஹான் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் மாளிகைக்காடுபிரதேசசெயற்பாட்டாளர் இர்ஷாட், காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் தமது கட்சியின் வெற்றிக்காக தேர்தல் பிரசாரப் பணிகளில் மும்முரமாக ஈடுப்பட்டனர்.

## மக்களுக்கு பணியாற்றுவதே எமது முழுமையான நோக்கம்

### தைக்கா நகர் வட்டார வேட்பாளர் ரியாஸ் தெரிவிப்பு

ஆண்டாண்டு காலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு நூறு வீதம் வாக்களிக்கின்ற ஒரு பிரதேசமாக அட்டாளைச்சேனை பிரதேசம் இருந்து வந்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அவ்வாறே வாக்களித்து என்னையும் வெற்றி பெறச்செய்வதன் மூலம் இன,மத வேறுபாடுகளுக்கப்பால் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு முடியுமான அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கமுடியும் என தைக்கா நகர் வட்டார வேட்பாளர் ரியாஸ் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமின்வழிகாட்டலின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளை கைப்பற்றுவதுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையினையும் ஸ்ரீ.மு.காங்கிரஸ் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்விதசந்தேகமும் இல்லை.

ஆகவேதான் அட்டாளச்சேனை பிரதேசத்தில் காணப்படுகின்ற வடிகான், தெருவிளக்குகள், குறுக்கு வீதிகள், சுகாதாரம், கல்வி பொருளாதாரம்,வாழ்வாதாரம் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை பிரதேசசபையின் ஊடாக செய்துகொள்ளவது மாத்திரமல்ல மத்திய அரசாங்கத்தினூடாக எமது கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர்களின் நிதி உதவி மூலமும் இப்பிராந்தியத்துக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவைகளை செய்வதற்கு ஒருபோதும் பின்னிக்கப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஏமாற்றும் கலாசாரத்திலிருந்து விடுபட்டு உண்மைக்கு சேவையாற்றும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யுங்கள்

### மக்களிடம் நளீர் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர், ஹாரீஸ்)



நாவிதன்வெளி பிரதேசசபை தேர்தலில் சுயேட்சை குழு -01 கால்பந்து சின்னத்தில் போட்டியிடும் அணியினரின் தலைமைகாரியாலயம் சாளம்பைக்கேணி வடக்கு வட்டாரம் ஆலடி சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு இரட்டை தொகுதிகளை வென்றெடுப்பதற்கு பிரபல சமூக சேவையாளர் நளீர் பௌண்டஷன் நிறுவுனர் எம்.ஏ. நளீர் கால்பந்து சின்னத்தில் களமிறங்கியுள்ளார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசத்தில் மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில் தான் தேர்தலில் போட்டியிடுவதாக தெரிவித்தார்.

மேலும், சாளம்பைக்கேணி வடக்கு வட்டார மக்கள் தனது வெற்றிக்காக வாக்களிக்க தீர்மானித்து விட்டார்கள். அவர்கள்



என்றும் என்னுடனே இருப்பார்கள். நான் அவர்களுக்குமுடியுமான சேவைகளைப் பெற்றுக்கொடுப்பேன். அவர்களுக்காக எனது வீட்டின் கதவு 24 மணி நேரமும் திறந்திருக்கும். விசேடமாக ஊரின் அபிவிருத்திக்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், மக்களின் வாழ்வாதார வசதிகளுக்கும் தான் பெரும் பங்காற்றி இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதன் அடிப்படையில் எமது வெற்றிக்காக விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள், அரச தனியார் துறை ஊழியர்கள் என அனைவரினதும் பங்களிப்பின் மூலம் எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டுவதன் ஊடாக வட்டார மக்களுக்கு மாத்திரமன்றி சகல மக்களுக்கும் தமது சேவைகளை திருப்திகரமாக வழங்க முடியும் என சுயேச்சைக் குழு கால்பந்து சின்னம் தலைமை வேட்பாளர் எம்.ஏ நளீர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல அரசியல் கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு உண்மைக்கு உண்மையாக சமூகத்துக்கு சேவையாற்றக் கூடிய ஒரு வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் எமது கால்பந்து சின்னத்துக்கு வாக்களித்து இரட்டை தொகுதிகளை வென்றெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேசசபை முன்னாள் பிரதி தவிசாளர் ஏ.கே அப்துல் சமத், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன், கால்பந்து சின்னம் சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## வவுனியா பூந்தோட்டத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டம்!

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக்கூட்டம் பூந்தோட்டம் பகுதியில் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

குறித்த பிரசாரக் கூட்டத்தில் முதன்மை அதிதியாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்து கொண்டிருந்தார்.

அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மற்றும் மாநகரசபையின் ஏனைய வட்டாரங்களின் வேட்பாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஐந்தாம் வட்டாரமான குடியிருப்பு பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் தேசியமக்கள் சக்தி சார்பில் நேரடி வேட்பாளராக கனகரத்தினம் கிருஸ்ணதாஸ், பட்டியல் வேட்பாளராக கணேசன் மோகன் ஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

100

காலைக்கதிர் Kalaikkathir

# சொப்பினுடன் புத்தளத்திற்கு வந்தோர் நிலை மாறியுள்ளது

## வவுனியாவில் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

மன்னாரில் இருந்து புத்தளத்திற்கு சொப்பின் பையுடன் வந்தவர்கள் இன்று பத்து கப்பல்களை வாங்கும் நிலையை அடைந்துள்ளனர். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பாக்கமாட்டோம். பொது மக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் வவுனியா மாநகரசபை வேட்பாளர்களை ஆதரித்து புதன்கிழமை இரவு இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

### சட்டம் சாதாரண மக்களுக்கே!

நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதே உண்மையான அரசியல். உங்களுக்கு தெரியும் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பெரிய மனிதர்களுக்கு இருக்கவில்லை. அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது. ஆனால் இன்று அதனை உங்களின் வாக்குகளின் மூலம் மாற்றியுள்ளோம். இன்று மிகப் பெரிய இலஞ்ச ஊழலில் ஈடுபட்ட முதலைகளை பிடித்து அவர்களுக்கு தண்டனை கொடுக்கும் வேலை நடக்கிறது. முன்னொரு காலத்தில் அமைச்சர்களை கண்டு பொலிஸார் ஓடி ஒளிந்தார்கள். இன்று பொலிஸுக்கு பயந்து அமைச்சர்கள் ஓடி ஒளியும் நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

### ராஜபக்சவே பெரிய முதலை

கிளிநொச்சியில் ஒருவர் கேட்டார் வட மாகாணத்தில் இருக்கின்ற கள்வர்களை நீங்கள் பிடிக்கமாட்டீர்களா என்று. இங்கே இருக்கின்ற கள்வர்களையும் நாங்கள் பிடிப்போம். இங்கும் மன்னாரில் இருந்து புத்தளத்திற்கு சொப்பின் பையுடன் வந்தவர்கள் இருக்கின்றனர். இப்போது அவர்களது சொத்துக்கள் மூலம் பத்து கப்பல்களை வாங்க முடியும். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்க மாட்டோம். பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். பெரிய முதலைகள் கொழும்பிலே தான் இருக்கிறார்கள். ராஜபக்ஸ மிகப் பெரிய முதலை. நாமல், யோசித்த ஆகியோருக்கு பொது மக்களின் பணத்தை சூறையாடியதற்காக வழக்குகள் பதிவு செய்துள்ளோம். எனவே உங்கள் வாக்குகள் மூலம் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. நாட்டின் பாதாளக் குழுக்களை உருவாக்கியது ராஜபக்ஸக்களும், விக்கிரம சிங்காக்களும், பிரேமதாஸக்களுமே.

### பெண்கள் பொட்டு வைத்தாலும் சோதனை

முன்பு சோதனை சாவடிகளில் பெண்கள் பொட்டு வைத்துச் சென்றால் இருமுறை சோதனை செய்வார்கள். பொட்டு இல்லாவிடில் ஒரு தரம் செய்வார்கள். முஸ்லிம் மக்கள் என்றால் மூன்று தரம் செய்வார்கள். அதை மாற்றும் செயற்பாட்டை நாம் முன்னெடுத்துள்ளோம். நாங்கள் இந்த அரசை பொறுப்பெடுத்து 5 மாதங்களே ஆகின்றது. ஓட்டோவை வேகமாக திருப்பலாம். பஸ்ஸையும், கப்பலையும் வேகமாக திருப்புவது கடினமே. பிழையான வழியில் சென்ற தேசத்தையே திருப்ப நாம் முற்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் கிடைத்தது சொர்க்கமான பூமி அல்ல. வங்குரோத்தான ஒரு நாடு. ரணில் இந்த நாட்டை ஆண்ட போது டொலரின் பெறுமதி காலை ஒரு விலையிலும், மாலை ஒரு விலையிலும் இருந்தது. இன்று அதில் ஒரு ஸ்திரத்தன்மை காணப்படுகின்றது. உங்கள் பொருளாதாரபிரச்சனைகள் தீர்வதற்கு கொஞ்சக் காலம் எடுக்கும்.

### இனி கனடா வேண்டாம்

காணாமல் ஆக்கப்பட்ட ஒரு மகன் மீண்டும் கிடைத்தது போல வடமாகாணம் எமக்கு கிடைத்துள்ளது. அதனை நாங்கள் அன்போடு பாதுகாப்போம். வடக்கை வளப்படுத்த எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். பலாலி விமான நிலையத்தை விருத்தி செய்வோம். அங்கு கொழும்பில் இருந்து ஆள்களை வேலைக்கு அமர்த்த நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கைத்தொழில் பேட்டைகள் உருவாக்குவோம். காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் அவை அமையவுள்ளன. அதன் பிறகு உங்களது உறவுகளுக்கு சொல்லுங்கள். கனடா சென்று பனியிலே கஸ்ரப்படும் நிலை மாறும் என்று.

### 100 ஏக்கர் காணி விரைவில் விடுவிப்பு

இந்த பிரதேசத்தில் இருக்கும் காணியை யுத்த தேவைகளுக்காகவும் அதற்கு பிறகும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். பொது மக்களின் காணிகளை அவர்களுக்கே வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். கிட்டத்தட்ட 25 பகுதிகளில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை விரைவில் விடுவிப்பதற்கு அடையாளம் கண்டுள்ளோம். சிலர் நினைக்கிறார்கள் தாங்கள் பிடித்த நிலங்களை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்று. ஏனெனில் மீண்டும் ஒரு யுத்தம் வரலாம். வந்தால் தங்களுக்கு சுலபம் என நினைக்கிறார்கள். மீண்டும் ஒரு யுத்தம் வருமா என்று உங்களிடம் கேட்கிறேன். இனிமேல் யுத்தம் வராது. நாங்கள் தேசிய சமாதானத்தை நிலை நிறுத்தும் ஒரு தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.

### வடக்கில் ராஜபக்ஸக்கள்

நிலங்களை விடுவிக்கும் போது தெற்கில் உள்ள இனவாதிகளுக்கு கஸ்ரமாக இருக்கும். அதேபோல வடக்கிலும் இனவாதிகள் உள்ளனர். நாலு மாதத்தில் ஓர் அப்பக்கடையை போடுவதே கடினம். நாங்கள் ஆனையிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். அதனை தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்சினையாக உள்ளது. உப்பு பக்கற்றில் பெயர் பிழையாம். உப்பிலே நீங்கள் பார்ப்பது பெயரையா, சுவையையா?. இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தை தூண்டும் ராயபக்ஸ போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர்.

### வடக்கின் பெரிய தமிழ்க் கட்சி நாங்களே.

தமிழ் கட்சிக்கு வாக்களிக்குமாறு இன்று சொல்கிறார்கள். இலங்கையில் உள்ள மிகப்பெரிய தமிழ் கட்சி தேசிய மக்கள் சக்தியே. வன்னி, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் உள்ள மிகப்பெரிய தமிழ் கட்சி தேசிய மக்கள் சக்தியே. சுமந்திரனுக்கான வாக்குகள் யாழில் இம்முறை கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் தமிரசுக்கட்சியில் ஒருவர் கூட நாடாளுமன்றில் இல்லை. சிறிதரன் கிளிநொச்சி வாக்குகளாலே வந்தார். இலங்கையில் உள்ள பெரிய




முஸ்லிம் கட்சியும் தேசிய மக்கள் சக்தியே. பெரிய சிங்கள கட்சியும் அதுவே.

### கம்மன்பில ராஜபக்ஷவின் கோளையாள்

தெற்கின் கம்மன்பில போன்றோர் வடக்கிலும் உள்ளனர். அரசியல் அநாதைகளாக உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் இனவாதத்தை விதைக்கிறார்கள். ஈஸ்ரர் தாக்குதலில் சந்தேகத்தின் பெயரில் தான் பிள்ளையானை கைது செய்திருக்கிறோம். அவரை கைது செய்தவுடன் அவருக்கு தொலைபேசி அழைப்பில் கதைக்கவேண்டும் என முதலாவதாக முற்பட்டவர் யார் என்று தெரியுமா பிள்ளையானின் மனைவி அல்ல. ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இருவரும் நண்பர்களா. ஒருபோதும் இல்லை. கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக ஏன் மாறுகிறார். அவர் ராயபக்ஸவின் கோளையாள். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை கண்டறிய விசாரணை நடத்தப்படும் போது ராயபக்ஸ, ரணில், சஜித் அனைவரும் குழப்பம் அடைந்துள்ளனர். நாட்டை வளப்படுத்த முற்படும் போது கள்வர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

### சுமந்திரனை விட யாழிற்கு பலமுறை சென்றுள்ளேன்.

ஒற்றுமையை ஏற்படுத்தும் போது இனவாதிகள் குழப்பம் அடைந்துள்ளனர். யாழில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் எமது வேட்பாளர்கள் தொடர்பாக தேவையில்லாத விடயங்களை சொல்லி வருகின்றனர். இப்படியான பொய்களை மக்கள் நம்பவேண்டாம். கிராமத்திலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அமைப்போம். எனவே மக்கள் அர்ப்பணிப்புள்ள வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டும். தமிழரசுக் கட்சிக்கு ஒரு தொன் காசு வழங்கினாலும் வேலை செய்ய மாட்டார்கள். வட மாகாண சபையில் நடந்தது உங்களுக்கு தெரியும். மகிந்த தெற்கிலே களவெடுத்தார். தேர்தலில் கூறுவார் சிங்கள ஜாதி சிங்கள ஜாதி என்று. சிங்கள மக்கள் வாக்களித்தார்கள். அவர் திறைசேரியை பூச்சியமாக்கினார். வடக்கிலும் அப்பிடி சிலர் உள்ளனர். அவர்கள் அரசியல் சோம்பேறிகள். சும்மா இருப்பார்கள். தேர்தல் காலங்களில் தமிழர் உரிமை, தமிழர் உரிமை என்பார்கள். தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். அவர்கள் லண்டனுக்கு போய்விடுவார்கள். இது தானே இதுவரை காலமும் நடந்தது. சில தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் இங்கு தேர்தலில் போட்டியிடும் நிலையில் அவர்கள் அரசியல் சுற்றுலா பயணிகளாகவே உள்ளனர். நான் நினைக்கிறேன் சுமந்திரனை விட நான் அதிகமாக யாழ்பாணம் போயிருப்பேன் என்று. எனவே தேசியமக்கள் சக்தி உங்களுடைய கட்சி எனத் தெரிவித்தார். 100

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# இலங்கையில் தனிச்சிறப்புப் பெற்ற வைரவ சுவாமி வழிபாடு

28.04.2025 திங்கட்கிழமை பைரவ வழிபாட்டுக்குச் சிறப்புடைய சித்திரைப் பரணி என்னும் சிறப்புறு திருநாள் வருகிறது.



வட இலங்கையில் ஊர்கள் தோறும், தெருக்கள் தோறும் பரவியுள்ள சிறப்பான வழிபாடுபைரவ வழிபாடாகும்.

பைரவ (வைரவ) வழிபாடு மிக எளிமையாக சூலம், மரம், கல் போன்றவற்றில் பைரவரை வரவழைத்து நிறைவேற்றப்படுவதை காணலாம்.

இது தவிர, வட இலங்கையில் ஊர்கள்தோறும் பைரவருக்கு தனியான சிறப்பான ஆலயங்கள் உள்ளன.

இங்கெல்லாம் கிராமிய பாரம்பரியங்களுடன் சித்திரை, வைகாசி மாதங்களில் ஒரு செவ்வாய்/ திங்கள்/ வெள்ளி விளக்கு வைத்து மறு வாரம் பொங்கல் மடை பரவி சிறப்பு வழிபாடு செய்வதை காணலாம்.

வளந்து பானை என்று சிறப்பாக புனித நீரெடுத்த பானையை கோயிலை சுற்றி வந்து அடுப்பில் ஏற்றி பொங்கி வழிபட காணலாம். ( இம்மரபுகள் தனியே விரிவாக பதிவு செய்தற்குரியன.)

பைரவ மூர்த்திக்கான ஆலயங்கள் பலவற்றில் தேரேறும் கடவுளாக, திருவூஞ்சலாடும் பிரானாக, சப்பறப்பவனி காணும் தெய்வமாக பைரவர் அருளுகிறார்.

தவிர, பூதவராஜர், அண்ணமார், சட்டைநாதர், என்று பல பெயர்களிலும் வடிவங்களிலும் இங்கு பைரவர் வழிபாடு பரவி உள்ளது.

ஞான மூர்த்தியாகவும், கால பயம் அகற்றும் கால பைரவராகவும், நோயகற்றும் இறைவனாகவும் இவர் திகழ்கிறார்.

சிவவடிவம் கொண்ட மகாபைரவரை கபால சமர்ப்பணமாக வடை நெய்வேதித்து வடை மாலை சாற்றி வழிபடுவர்.

பைரவர் அருளால்பிறந்த குழந்தைகளுக்கு க்ஷேத்திரபாலன் என்றும் ஆபதோத்தாரணன் என்றும் பெயரிட்டு மகிழ்ந்த மரபை கூட யாழ்ப்பாணத்தில் காணலாம்.

இந்த பெயர்களில் பல புகழ் பெற்று விளங்கிய பைரவநாதக்குருக்கள், ஆபதோத்தாரணக்குருக்கள் என்று சிவாச்சார்யர்களும் இருந்துள்ளனர்.

பரணி நாளிலும், அஷ்டமி திதியிலும், வெள்ளி, செவ்வாய் கிழமைகளிலும் பைரவ வழிபாடு சிறப்பாக செய்யப்படுகிறது.

தவிர, பைரவரை நரசிம்ம மூர்த்தியோடு இணைத்து ந்ருசிம்ம பைரவராக வழிபடும் மரபும் வட இலங்கையில் உள்ளது.

காவல் தெய்வமான பைரவர் ஆலயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சூழலிலும், புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வளாக மத்தியிலும் இன்னும் இவ்வாறான பல இடங்களிலும் பல்லாண்டுகளாக இருக்க காணலாம்..

நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற முக்கிய ஆலயங்களில் முதன்மையான மூர்த்திகளுள் ஒருவரான திரிசூல பைரவர் இருக்க காணலாம். இந்த மூர்த்தியிடம் திருவுளச்சீட்டு பெற்றே நல்லூரில் முக்கிய பணிகள் முன்னெடுக்கப்படுவதாக நம்பிக்கையும் உண்டு.

இதை விட, வட இலங்கையில் பைரவ மூர்த்தியையே மூல மூர்த்தியாக கொண்ட பல நூறு ஆலயங்களை காணலாம்.

பல வகை மரபை சார்ந்தவர்களும் தத்தம் முறையில் தத்தம் மரபில் இம்மூர்த்தியை இயல்பாக வழிபடுவர்.

இலங்கையில் பல இடங்களில் பைரவ மூர்த்தி தேரிலும் பல்வகை வாகனங்களிலும் உலாவும் காணுவார்.

உக்ர பைரவர், நரசிம்மபைரவர், ஞானபைரவர், கால பைரவர் என்ற பெயர்களில் இங்குள்ள ஆலயங்களில் பைரவ மூர்த்தி தரிசனம் தருகிறார்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்று எத்தனை எத்தனை ஆக்கிரமிப்புகள்... எவ்வளவு அட்டூழியங்கள்... நீண்ட யுத்தங்கள்... அழிவுகள்...இடப்பெயர்வுகளுமான... எத்தனை பிரச்சனைகள்... எல்லாவற்றையும் கடந்து நாமேதோ இன்றும் வாழ செய்பவர் பைரவரே.



ஆபதோத்தாரண மூர்த்தியான இவர் சட்டைநாதர் என்ற பெயரிலும் பூதவராஜர் என்ற பெயரிலும் கூட பைரவ மூர்த்தி காட்சி தருகிறார்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி மிக்க சூழ் நிலையையும் கடக்க பைரவ மூர்த்தி தான் மனோ பலம், உடல் ஆரோக்கியம் அருள வேண்டும்.

நாமமுறு மூவிலைவேல் நாளலருஞ் செவ்வலரித்
தாமமணி மார்பிலங்கத் தண்டையொலி சலசலக்கச்
சேமமுறு காவல்மகிழ் சேத்திரபா லகன்படுகன்
காமருபூங் கழலிணைகள் கருத்தினிலுள் இருத்துவாம்
(திருக்கேதீச்சர மான்மியம்)

**மயூரகிரி சிவாச்சார்யார்**






காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் தொடராக இடம்பெறும் கொலைகள் பாதுகாப்பு நிலைமை குறித்து மக்கள் அச்சும் நிலைமை உருவானது

## றிசாத் எம்.பி குற்றச்சாட்டு



நாட்டில் தொடர் தோர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகள் மற்றும் பாதாள உலக கோஸ்டியினுடைய கொலைகள் நாட்டின் பாதுகாப்பு நிலைகுலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலைமையை உருவாக்கியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றிசாத் பதிர்யுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை ஆதரித்து புதன்கிழமை இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஜேவிபி எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் நாட்டில் இவ்வாறான கொலைகள் இடம்பெற்ற போது அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் மீது பேசியதைக் கண்டோம். ஆனால் புதிய அரசாங்கத்தின் வருகையின் பின் அடிக்கடி கொலைகள், பாதாள உலக கோஸ்டியினுடைய கொலைகள் அடிக்கடி நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றக. அண்மையில் கொல்லப்பட்டவர் சம்மந்தமாக எங்களுக்கு வேறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தொடர் தோர்ச்சியாக இவ்வாறான கொலைகள் இடம்பெறுவது எதிர்காலத்தில் சுற்றுலாத் துறை பாதிக்கப்படுவதற்கும், இந்த நாட்டின் பாதுகாப்பு நிலை குலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலை உருவாகுவதற்கும் வழிவகுக்கும்.

இந்த அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலை தொடர்பில் இன்னும் மெத்தனப் போக்கோடு தான் நடந்து கொள்கிறார்கள். அதனையும் கவனத்தில் கொண்டு செயற்படுத்த வேண்டும். அதேபோல் தேர்தலுககு முன்னர் வழங்கிய பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாக இருக்கின்றன.



அதுமட்டுமல்லாது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கா எல்லோரும் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதாகத் தான் வந்தார்கள். அதுவும் இந்த அரசாங்கம் ஏபரல் 21 இற்குள் குற்றவாளிகளை கண்டு பிடிப்போம். அறிவிப்போம் என்றார்கள். ஆனால் எல்லாம் செய்தியாகத் தான் இருக்கின்றதே தவிர, மக்கள் எதிர்பார்த்த எதிர்பார்ப்புக்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும், சிறைகளுக்கு சென்று பதிக்கப்பட்ட இஸ்லாமிய மக்களும் இந்த விடயத்தில் அராங்கத்தின் மீது பெரிய எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியில் இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக பேசி வந்தார்கள். அந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பன்படுத்தி சின்ன வேலைகளுக்கு கைது செய்கிறார்கள். குறிப்பாக போஸ்டர் ஒட்டுதல், முகப் புத்தகத்தில் பதிவேற்றுதல் என்பவற்றுக்கு இந்த சட்டத்தை பயன்படுத்துகிறது. ஆனால் உடனடியாக அதனையும் நீக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

100



# இயலாமைகொண்ட நபர்களுக்கான அணுகல் வசதி தொடர்பான ஆய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு!

(சுபேசன்)

இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் வசதிகள் தொடர்பான ஆய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'பேவ்'செயற்திட்ட இளைஞர் குழுவின் முயற்சியாக மேற்படி இயலாமை கொண்ட நபர்களுக்கான ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது ஆய்வறிக்கையின் முதற்பிரதியை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

மேலும் நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் , வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், மாற்றுத்திறனாளிகள் சங்க பிரதிநிதிகள்,

தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் நிகழ்சித்திட்ட அலுவலர் ஜொகான்சன் ,மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ர்முதா மற்றும் பேவ் செயல்திட்ட இளைஞர் குழுவினர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.



இதன்போது இயலாமை கொண்ட நபர்களுக்கான தேர்தல் வசதிப்பாடுகள் குறித்த விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு நகரில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்

## பிரேம்குமார் தெரிவிப்பு

(சக்திவேல்)

மட்டக்களப்பு நகரில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். ஆனால் ஒரு பலமான அரசாங்கத்துடன் இருக்கும் ஒரு மாநகர சபை ஆட்சியை அமைக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் மட்டு மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் கலாநிதி கனகராஜா பிரேம்குமார் தெரிவித்துள்ளார்.

மட்டு. மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் க. பிரேம்குமார் வியாழக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இதன்போது அவர மேலும் தெரிவிக்கையில் -



உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதன் மூலம் நாம் பல வேலை திட்டங்களை முன்னெடுக்க முடியும். மக்களின் வரி மூலம் சில வேலைதிட்டங்களை முன்னெடுத்தாலும் பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆளும் அரசாங்கத்தின் வகிபாகம் மிக முக்கியமானதாகும்.

எனவே மக்கள் ஆளும் அரசாங்கத்துடன் இருக்கும் கட்சியை ஆதரிப்பதே முக்கியமானதாகும். கடந்த ஆட்சியின் போது இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எமது ஜனாதிபதி அரசாங்கம் இருக்கும் போது வெற்றிக்கான நிதிகள் கிடைப்பது மிகவும் இலகுவான விடயம். எனவே மக்கள் எமது கட்சிக்கு ஆதரவுதர வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அறிக்கை வெளியீடு

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

இதன்போதுமாநகரமேஜர்வேட்பாளராகநியமிக்கப்பட்டால் எவ்வாறான விடயங்களைத் தம்மால் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பது தொடர்பான திட்டமிடல் காணொளி ஒன்று காண்பிக்கப்பட்டது.

மாநகர சபை வேட்பாளரான தீபன் திலீசன் தன்னால் மாநகர சபைக்கு செய்யக்கூடிய அதிக பட்ச வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழ்த் தரப்பிற்கு வாக்களிப்பதன் அவசியம் தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

மேலும் தேசிய மக்கள் சக்தியின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாகவும் விமர்சித்தார்












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2025இல் வெளியிடப்பெற்றது